FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(குற்றவியல் நடைமுறை சட்டம் 154 இன் கீழ்)

Under Section 173(1)(ii) BNSS & 154 Cr.P.C

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8120316

1. District : திண்டுக்கல் PS: டோ.நகர்-போலீஸ் Year: 2026 FIR No.: 08/2026 Date: 04.07.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988, as amended in 2018 Sections பிரிவுகள்: 7(ca)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: –
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: –
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : –

3. (a) Occurrence of Offence Day : Date from : 16.00 மணி முதல் Date to : 21.45 மணி வரை
குற்ற நிகழ்வு நாள் 03.07.2026 நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : Time to :
நேர அளவு – நேரம் முதல் – நேரம் வரை –
(b) Information Received at PS. Date : 04.07.2026 Time : 17.00 மணிக்கு
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: காமராஜர் நேரடி நேர்முக தேர்வு அலுவலகம் சுமார் 12 கி.மீ வடக்கு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : – (b) Address : –
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : – District : –
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : P.சிவகிருஷ்ணன் (b) Father's/ Husband's Name : பாண்டி
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 57/2026 (d) Nationality : இந்தியர் (e) Passport No. : –
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : – Place of Issue : –
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : அரசுப்பேருந்து அலுவலர் (g) Address : மாவட்ட அரசுப்பேருந்து அலுவலர் அலுவலகம், மதுரை
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1) திருமதி.S.மாரு மெய்யாண்டி, பெண்டி அலுவலர், நடுக்கோம்பு நேரடி நேர்முக தேர்வு அலுவலகம், திண்டுக்கல். 2) திருமதி.K.தனலட்சுமி, கொத்தால உதவியாளர், நடுக்கோம்பு நேரடி நேர்முக தேர்வு அலுவலகம், திண்டுக்கல். 3) திரு.R.ஜான் பிரசாத் ராஜ் (ராஜபுத்திரன்), த/பெ.ரோஜர், உள்ளார் பட்டி அஞ்சல், நடுக்கோம்பு, திண்டுக்கல். 4) திரு.G.முனியாண்டி (எ) முனியசாமி, த/பெ.கருப்பசாமி, வயது.83, பழனிசெட்டிபட்டி, பாலசமுத்திரம், திண்டுக்கல்

8. Reasons for delay in reporting by the complainant / informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

–

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attaoh separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

04/07/26

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் .....
Rank: நிலை .....No. எண் .....

திண்டுக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்.08/2026, சட்டப்பரிவு.7(a) ஊழல் தடுப்பு சட்டம் 1988 (திருத்தி அமைக்கப்பட்ட) சட்டம் 2018 வழக்கின் முதல் தகவலறிக்கையின் தொடர்ச்சி.

திண்டுக்கல், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் ஆகிய நான் இன்று 04.07.2026-ம் தேதி மாலை 17.00 மணிக்கு நிலையத்தில் இருந்தபோது மதுரை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு.P.சிவக்குமார், என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரை பெற்று 04.07.2026-ம் தேதி மாலை 17.00 மணிக்கு கீழ்கண்டவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் திரு.P.சிவக்குமார், 57/2026, த/பெ.பாண்டி, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மதுரை மாவட்டம். பெறுநர். காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திண்டுக்கல் அய்யா, நான் மதுரை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகத்தில் ஆய்வுக்குழு அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். 03.07.2026ம் தேதி மதியம் சுமார் 14.00 மணிக்கு திண்டுக்கல் மாவட்டம், தாடிக்கொம்பு தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகத்தில் வீடு மற்றும் வணிக வளாகங்கள் கட்டுவதற்கான கட்டிட அனுமதி வழங்குதல், குடிநீர் இணைப்பு வழங்குதல் மற்றும் சொத்துவரி நிர்ணயம் செய்தல் ஆகிய பணிகளுக்கு அலுவலகத்திற்கு வரும் பொது மக்கள் மற்றும் ஒப்பந்ததரர்களிடமிருந்து செயல் அலுவலர் மற்றும் அலுவலக பணியாளர்கள் தனி நபர்கள் மூலமாக லஞ்சத்தை பணமாகவும் மற்றும் UPI பணப்பரிவர்த்தனை மூலமாகவும் பெறுவதாகவும் கிடைத்த ரகசிய தகவலின் பேரில் 03.07.2026ம் தேதி மாலை 15.30 மணிக்கு திண்டுக்கல் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் இருந்து நான் மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு காவல் ஆய்வாளர் திரு.P.பழனிச்சாமி மற்றும் பார்ட்டி சகிதம் திடீர் சோதனை செய்வதற்காக அரசு வாகனம் TN 21 G 0583 பொலிரோ வாகனத்தில் தாடிக்கொம்பு தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகத்திற்கு மாலை சுமார் 16.00 மணிக்கு வரப்பட்டது. அந்த அலுவலகமானது கிழமேலாக தாடிக்கொம்பு ஸ்ரீசௌந்தரராஜ பெருமாள் கோவில் செல்லும் சாலையில் வடக்கு பக்கம் தெற்கு பார்த்தவாறு அமைந்துள்ளது, தாடிக்கொம்பு தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகத்திற்குள் நுழைந்தபோது அந்த அலுவலகத்தின் தென்மேற்கு மூலையில் செயல் அலுவலர் அறையில் கிழக்கு பார்த்தவாறு இருக்கையில் ஒருவர்

அமர்ந்திருந்தார். அவரிடம் காவல் ஆய்வாளர் அவரையும் என்னையும் அறிமுகம் செய்து கொண்டு அவரைப்பற்றி கேட்க அவரது பெயர் திருமதி.S.பானுஜெயராணி, செயல் அலுவலர் என்றும் கடந்த 03.06.2025 முதல் பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அவரிடம் சோதனை செய்ய வந்த விபரத்தை தெரிவித்து சோதனைக்கு ஒத்துழைக்குமாறு காவல் ஆய்வாளர் அவர்கள் கேட்டுக்கொண்டார். அவரும் சோதனைக்கு முழு ஒத்துழைப்பு அளிப்பதாக தெரிவித்தார். பின்னர் காவல் ஆய்வாளர் அவர்கள் செயல் அலுவலர் திருமதி.S.பானுஜெயராணி அவர்களிடம் அலுவலகத்தின் வருகைப்பதிவேடுகளை ஆஜர்செய்யுமாறு கேட்டுக்கொண்டார். அலுவலக பணியாளர்களின் வருகை பதிவேடு - 2026, பரப்புரையாளர்களின் வருகை பதிவேடு - 2026 மற்றும் மக்கள் தொகை கணக்கெடுப்பு தொழில்நுட்ப உதவியாளர் வருகை பதிவேடு - 2026 ஆகியவற்றை ஆஜர் செய்தார். அதனை நானும் காவல் ஆய்வாளர் அவர்களும் பார்வையிட்டோம். அலுவலக பணியாளர்களின் வருகை பதிவேட்டினை பார்வையிட்டதில் 03.07.2026ம் தேதி தலைமைஎழுத்தர் / உதவியாளர் திருமதி.D.மகாலிங்கம், இளநிலைஉதவியாளர், திருமதி.K.கலைச்செல்வி, சுகாதார ஆய்வாளர் திரு.S.கணேசன், இளநிலை பொறியாளர் திரு.P.மாயன் ஆகியோர் சுருக்கொப்பம் செய்திருந்தனர். இதில் இளநிலை உதவியாளர், திருமதி.K.கலைச்செல்வியை தவிர அனைவரும் அலுவலக பணியாக வெளியில் சென்றுள்ளதாகவும், அலுவலக உதவியாளர் திரு.M.கோபாலகிருஷ்ணன் அவர்கள் தற்செயல் விடுப்பில் உள்ளதாகவும் செயல் அலுவலர் திருமதி.S.பானுஜெயராணி அவர்கள் தெரிவித்தார். பரப்புரையாளர்கள் வருகை பதிவேட்டினை பார்வையிட்டதில் 03.07.2026ம் தேதி பரப்புரையாளர்கள் திரு.S.பேட்ரிக்ஹென்றி, திரு.P.கோபிநாத் மற்றும் திருமதி.K.அபிராமி ஆகியோர் சுருக்கொப்பம் செய்திருந்தனர். இதில் பரப்புரையாளர் திருமதி.K.அபிராமி அவர்களை தவிர இருவரும் அலுவலக பணியாக வெளியில் சென்றுள்ளதாக செயல் அலுவலர் திருமதி.S.பானுஜெயராணி அவர்கள் தெரிவித்தார். மக்கள் தொகை கணக்கெடுப்பு தொழில்நுட்ப உதவியாளர் வருகை பதிவேட்டினை பார்வையிட்டதில் 03.07.2026ம் தேதி தொழில்நுட்ப உதவியாளர் திரு.S.பாலவிக்னேஷ் அவர்கள் சுருக்கொப்பம் செய்திருந்தார். அவர் அலுவலகத்தில் ஆஜரில் இருந்தார். மேலும் தனிநபர் பண இருப்பு பதிவேடு இவ்வலுவலகத்தில் பராமரிக்கப்படவில்லை எனவும் செயல் அலுவலர் அவர்கள் தெரிவித்தார். பெண்

அலுவலர்களை சோதனை செய்வதற்காக அருகிலுள்ள தாடிக்கொம்பு காவல்நிலையத்திற்கு தகவல் தெரிவித்து திருமதி.N.மல்லிகா, த.கா.1701, தாடிக்கொம்பு காவல் நிலையம் அவர்கள் ஆஜர் ஆனார். அதன்பின்னர் நானும், காவல் ஆய்வாளர் அவர்களும் அறிவுறுத்தியபடி தலைமைக்காவலர் திருமதி.N.மல்லிகா அவர்கள் செயல் அலுவலர் திருமதி.S.பானுஜெயராணி அவர்களை சோதனையிட அவரிடம் பணம் ரூ.790/- இருந்தது. மேற்கண்ட பணம் குறித்து செயல் அலுவலர் திருமதி.S.பானுஜெயராணி அவர்களிடம் விளக்கம் கேட்க, அந்த பணம் அவரது சொந்தபணம் என்று தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்கவகையில் இருந்ததால் என் முன்னிலையில் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவரது இருக்கை மற்றும் டேபிளில் வைக்கப்பட்டிருந்த கோப்புகள், வலது பக்க டிராயர் மற்றும் அவரது இருக்கையின் பின்புறம் வைக்கப்பட்டிருந்த இரும்புபீரோ ஆகியவற்றை என் முன்பு சோதனை செய்ய பணமோ, பொருளோ கண்டறியப்படவில்லை. செயல் அலுவலரின் இருக்கைக்கு எதிரே போடப்பட்டிருந்த இருக்கையில் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க அவரது பெயர் திரு.P.ரமேஷ்குமார், இளநிலை பொறியாளர் எனவும், நத்தம் பேரூராட்சி அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாகவும், கூடுதல் பொறுப்பாக சின்னாளபட்டி, ஸ்ரீராமபுரம் மற்றும் தாடிக்கொம்பு தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகங்களில் பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அவரை என் முன்பாக சோதனை செய்ய அவரிடம் பணம் ரூ.970/- இருந்தது. இந்த பணம் சம்மந்தமாக இளநிலை பொறியாளர் திரு.P.ரமேஷ்குமார் அவர்களிடம் விளக்கம் கேட்க, அந்த பணம் அவரது சொந்தபணம் என்று தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இருந்ததால் என் முன்னிலையில் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. செயல் அலுவலர் அறைக்கு வடக்கு பக்கம் கிழக்கு பார்த்தவாறு வாசல் கொண்ட கணினி அறை உள்ளது. அந்த அறையில் பணியிலிருந்த தற்காலிக கணினி ஆபரேட்டர்கள் செல்வி.P.பாரதி மற்றும் திரு.A.ஆனந்தபாபு ஆகியோரை விசாரிக்க, அவர்கள் தற்காலிகமாக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தனர். அவர்களையும் அவர்களது இருக்கையினையும் சோதனை செய்ய பணமோ பொருளோ கண்டறியப்படவில்லை. அந்த அறையில் நின்று கொண்டிருந்த ஒரு பெண்ணை விசாரிக்க அவரது பெயர் திருமதி.கலைச்செல்வி என்றும் இளநிலை உதவியாளராக பணிபுரிந்துவருவதாகவும் தாடிக்கொம்பு தேர்வுநிலை பேரூராட்சியில் செலுத்தப்படும்

வரிகளை பெற்றுக்கொண்டு ரசீது வழங்கும் பணியினை செய்து வருவதாகவும் தெரிவித்தார். அப்போது அவருக்கு முன்பாக போடப்பட்டிருந்த மரடேபிளில் இளஞ்சிவப்பு நிற சிறிய கைப்பை ஒன்று காணப்பட்டது. அது குறித்து கேட்ட போது அவற்றில் இன்று சொத்துவரி மற்றும் குடிநீர்குழாய் இணைப்பு தொடர்பாக பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட பணத்தை பெற்று வைத்திருப்பதாக தெரிவித்தார். அதனை என் முன்னிலையில் எண்ணிப்பார்க்க பணம் ரூ.500x48 = ரூ.24,000/-, ரூ.200x2 = ரூ.400/-, ரூ.100 x 110 = ரூ.11,000/- ஆக மொத்தம் ரூ.35,400/- இருந்தது. 03.07.2026 அன்று செலுத்தப்பட்ட சொத்துவரி மற்றும் குடிநீர் குழாய் இணைப்பு தொடர்பாக பதிவு செய்யப்பட்ட வரி விதிப்பு தொடர்பான Abstract வழங்குமாறு காவல் ஆய்வாளர் அறிவுறுத்தினார். அப்போது திருமதி.கலைச்செல்வி கணிணியிலிருந்து பதிவிறக்கம் செய்து 03.07.2026ம் தேதிக்கான Thadicombu Town Panchayat Challan Register-ன் Abstract ஐ ஆஜர் செய்தார். அதில் 50 Assessment எண்களில் சொத்து வரி மற்றும் இதர வரிகளாக ரூபாய்.8,730/- வசூல் செய்யப்பட்டிருந்தது தெரியவந்தது. மேலும் பிறப்பு பதிவு காலதாமத கட்டணமாக ரூ.500/- ஆனது செலுத்து சீட்டு எண். 211/2026-27, நாள். 03.07.2026 மூலம் பெறப்பட்டுள்ளது தெரியவந்தது. ஆக மொத்தம் ரூ.9,230/- அரசு கணக்கில் பெறப்பட்டது உறுதி படுத்தப்பட்டது. மீதிப்பணம் குறித்து திருமதி.கலைச்செல்வி அவர்களிடம் கேட்ட போது தாடிக்கொம்பு, காம்ாட்சிபுரத்தை சேர்ந்த திரு.கனகராஜ், த/பெபெரியசாமி மற்றும் காப்பிளியபட்டி புதுரரை சேர்ந்த திரு.ராஜா ஆகிய இருவரும் குடிநீர் குழாய் இணைப்பு பெறுவதற்காக தலா ரூ.12,700/-ஐ கட்டணமாக செலுத்துவதற்காக மொத்தம் ரூ.25,400/- கொடுத்திருந்ததாகவும், அதனை சலான் கட்டுவதற்காக வைத்திருப்பதாகவும், மீதிப் பணம் ரூ.770/- அவரது சொந்தப்பணம் என்றும் தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இல்லாததாலும், மேற்படி இருவருக்கும் குடிநீர் குழாய் இணைப்பு வழங்கு வதற்காக லஞ்சமாக செயல் அலுவலர் திருமதி.S.பானுஜெயராணி அவர்களுக்காக பெற்று வைத்துள்ளார் என்று நம்புதவற்கு தகுந்த முகாந்திரம் இருப்பதாக தெரிவருகிறது. திரு.கனகராஜ் மற்றும் திரு.ராஜா ஆகிய இருவரது விண்ணப்பத்தினையும் எடுத்து பார்வையிட்டபோது அந்த இருவரின் விண்ணப்பமும், எவ்வித அலுவலக முத்திரையும் இடப்படாமல் அப்படியே வாங்கி வைக்கப்பட்டுள்ளது. புதிய குடிநீர் குழாய் இணைப்பு

பெறுவதற்கு பொது மக்கள் மனு கொடுக்கும் பட்சத்தில் அதனை செயல் அலுவலர் பார்வையிட்டு சம்மந்தப்பட்ட இளநிலை பொறியாளருக்கு தொடர் நடவடிக்கைக்காக அனுப்பி வைக்க வேண்டும். ஆனால் அவ்வாறு எதுவும் இல்லாமல் வெறுமனே மனுக்களை பெற்று வைத்துள்ளது சம்மந்தப்பட்ட நபர்களிடமிருந்து லஞ்சமாக பணத்தினை பெற்று வேலையினை செய்து தர முயற்சி செய்யும் ஒரு செயலாகவே கருதப்படும். எனவே பணம் ரூ.25,400/- பெறப்பட்ட விதம் சந்தேகத்திற்கு இடமான வகையில் இருப்பதால் விசாரணைக்காக மகஜரில் என் முன்பாக கைப்பற்றப்பட்டது. அரசு கணக்கில் பெறப்பட்ட பணம் ரூ.9,230/- மற்றும் அவரது சொந்தப்பணம் ரூ.770/- என மொத்தம் ரூ.10,000/-த்தை என் முன்பாக திருமதி.கலைச்செல்வி அவர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அந்த பணத்தை உரிய அரசு கணக்கில் செலுத்துமாறு செயல் அலுவலர் திருமதி.S.பானுஜெயராணி அவர்களை காவல் ஆய்வாளர் அறிவுறுத்தினார். பின்னர் மேற்படி செயல் அலுவலரின் அறைக்கு வெளியே நின்று கொண்டிருந்த ஒருவரை விசாரிக்க அவரது பெயர் திரு.R.ஜான், த/பெ.ரத்தினம், கே.பிரகறை, உண்டார்பட்டி அஞ்சல், தாடிக்கொம்பு என்றும், அன்னை ஏஜென்சீஸ் என்ற பெயரில் எலெக்ட்ரிக்கல் கடை நடத்தி வருவதாகவும், வீடு கட்டுவது தொடர்பாக எவ்வளவு தொகை அரசுக்கு கட்டவேண்டும் என கேட்பதற்காக செயல் அலுவலர் அவர்களை பார்க்க வந்ததாக தெரிவித்தார். அவரை என் முன்பாக சோதனை செய்ய அவரிடம் 500 ரூபாய்தாள்கள் 31 எண்ணிக்கையில் ரூ.15,500/- இருப்பது கண்டறியப்பட்டது. அந்த பணம் குறித்து அவ்ரிடம் விளக்கம் கேட்ட போது அவர் திண்டுக்கல்லில் உள்ள சுரபி பைனான்ஸ் நிறுவனத்தில் கார் கடன் பெற்றுள்ளதாகவும், அதனை செலுத்துவதற்காக வைத்திருந்ததாகவும் தெரிவித்தார். பின்னர் காவல் ஆய்வாளர் அவர்கள் செயல் அலுவலர் திருமதி.S.பானுஜெயராணி அவர்களிடம் திரு.ஜான் அவர்கள் குறித்து கேட்ட போது, அதற்கு அவர் அன்னை எலெக்ட்ரிகல்ஸ் என்ற பெயரில் எலெக்ட்ரிக்கல் கடை ஒன்றினை அவர் நடத்திவருவதாகவும், அவ்வப்போது எலெக்ட்ரிகல்ஸ் பொருட்களை தாடிக்கொம்பு பேரூராட்சிக்காக வாங்குவோம் என்றும் தெரிவித்தார். எனவே காவல் ஆய்வாளர் அவர்கள் செயல் அலுவலர் திருமதி.S.பானுஜெயராணி அவர்களிடம் அன்னை எலக்ரிகல்ஸ் என்ற கடையில் சமீபத்தில் பொருட்கள் எதுவும் வாங்கப்பட்டுள்ளதா என்று கேட்டார். அதற்கு ஆம் என்று தெரிவித்து சில பில்களை சமர்ப்பித்தார். அவற்றில் அன்னை

எலெக்ட்ரிகல்ஸ் கடையில் இருந்து பொருட்கள் வாங்கபட்டதற்கான ரசீதுகள் இருப்பது கண்டறியப்பட்டது. செயல் அலுவலரின் கூற்றிலிருந்து திரு.ஜான் அவர்கள் தாடிக்கொம்பு தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகத்திற்கு அவ்வப்போது வாங்கப்படும் எலெக்ட்ரிக்கல் பொருட்களுக்காக செயல் அலுவலர் திருமதி.பானுஜெயராணி அவர்களுக்கு லஞ்சமாக கொடுப்பதற்காக கொண்டு வந்த பணம் என்று நம்புவதற்கு தகுந்த முகாந்திரம் இருப்பது தெரியவந்தது. எனவே பணம் ரூ.15,500/- ஆனது விசாரணைக்காக மகஜரில் என் முன்பாக கைப்பற்றப்பட்டது. பின்னர் மேற்படி அலுவலகத்தின் கணிணி அறையின் அடுத்து அமைந்துள்ள ஹாலின் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க அவரது பெயர் திருமதி.K.அபிராமி, க/பெ.கருணாநிதி எனவும், தாடிக்கொம்பு தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகத்தில் பரப்புரையாளராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அவரை பெண் தலைமைக்காவலர் முன்னிலையில் சோதனை செய்ய அவர் வைத்திருந்த இளஞ்சிவப்பு நிற பர்சில் ரூ.500x10 = ரூ.5,000/-ம், ரூ.100x29= ரூ.2,900/-, ரூ.200x3 = ரூ.600/-, ரூ.50 x 4 = ரூ.200/-, ரூ.20 x 22 = ரூ.440/-, ரூ.10 x 7 = ரூ.70/-, ரூ.5 x 1 = ரூ.5/- என மொத்தம் ரூ.9,215/- இருப்பது கண்டறியப்பட்டது. மேலும் அந்த ரூபாய் நோட்டுகள் புத்தம் புதிதாகவும் இருந்தது. அந்த பணம் குறித்து திருமதி.அபிராமி அவர்களிடம் விளக்கம் கேட்க, அவர் ரூபாய் தாள்கள் புதிதாக இருந்தால் அவற்றை செலவழிக்காமல் சேமித்து வைக்கும் பழக்கம் உள்ளதாகவும், அதனை தொடர்ந்து அழுக்கடையாமல் பாதுகாத்து வருவதாகவும், ஒரு நினைவுக்காக வைத்திருப்பதாகவும் தெரிவித்தார். அவருடைய விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையிலும், அவரின் தனிப்பட்ட உணர்வை வெளிப்படுத்துவதாகவும் இருந்ததால் பணம் ரூ.9,215/-ஐ என் முன்பாக அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அந்த அலுவலகத்தின் ஹாலின் அருகே நின்று கொண்டிருந்த மற்றொரு வரை விசாரிக்க அவரது பெயர் திரு.துளசிராம், த/பெகாந்திநாதன், க.எண்.83, மாசிலாமணிபுரம், பாலகிருஷ்ணாபுரம், திண்டுக்கல் என்றும் ஆதி இன்ஜினியரிங் என்ற பெயரில் கட்டிட பணிகளை ஒப்பந்த முறையில் செய்து வருவதாகவும், சென்னமநாயக்கன்பட்டியை சேர்ந்த திருமதி.ஸ்ரீதேவி என்பவருக்கு சொந்தமான தாடிக்கொம்பு பேரூராட்சிக்கு உட்பட்ட VIP Cityல் மனை எண். 1 மற்றும் 2ல் உள்ள சர்வே எண். 2310-13 Bல் உள்ள மனையில் வீடு ஒன்றினை கட்டிக்கொடுத்துள்ளதாகவும் மனை வரன்முறை செய்து தருவது தொடர்பான

கோப்பினை பேரூராட்சி அலுவலகத்தில் கொடுத்துள்ளதாகவும், அதன்விபரம் கேட்பதற்காக அலுவலகத்திற்கு வந்ததாகவும் தெரிவித்தார். அவரை என் முன்பாக சோதனை செய்ய, அவர் அணிந்திருந்த நீலநிற ஜீன்ஸ் பேண்டின் வலது பக்க முன் பாக்கெட்டில் பணம் ரூ.500x21 = ரூ.11,500/-ம், ரூ.200x2 = ரூ.400/-, ரூ.100x1= ரூ.100/- என மொத்தம் ரூ.12,000/-ம் இருப்பது கண்டறியப்பட்டது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்க, அது அவரது சொந்தப்பணம் என்றும் செலவிற்காக வைத்திருப்பதாகவும் தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இல்லாத்தாலும் மேற்படி ஸ்ரீதேவி என்பவருக்கு சொந்தமான இடத்தில் இவர் கட்டிக்கொடுத்த வீட்டிற்காக மனை வரன் முறை செய்து தருவதற்கான கோப்பின் மீது நடவடிக்கை எடுப்பதற்காக செயல் அலுவலர் திருமதி.பானுஜெயராணி அவர்களுக்கு லஞ்சமாக கொடுப்பதற்காக கொண்டு வந்த பணம் என்று நம்புவதற்கு தகுந்த முகாந்திரம் இருப்பது தெரியவந்ததால் பணம் ரூ.12,000/-ம் என் முன்பாக விசாரணைக்காக மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேலும் அலுவலகத்தில் இருந்த திரு.M.சக்திவேல், 50/2026, த/பெமுனியாண்டி, தெருவிளக்கு பராமரிப்பவர், திரு.வேல்முருகன், 57/2026, த/பெகந்தன், தூய்மை பணியாளர், திரு.T.தினேஷ்குமார், 34/2026, த/பெ.தியாகராஜன், TNUS ஒப்பந்த ஊழியர் மற்றும் திரு.திருமூர்த்தி, 33/2026, த/பெஜெய்சங்கர், TNUS ஒப்பந்த ஊழியர் ஆகியோரை சோதனை செய்ததில் அவர்களிடம் பணமோ பொருளோ காணப்படவில்லை. பின்னர் அலுவலகத்தின் கீழ்தளத்தில் உள்ள அனைத்து அறைகளிலும் சோதனை செய்யபணமோ பொருளோ கண்டறியப்படவில்லை. பின்னர் செயல் அலுவலர் திருமதி.பானுஜெயராணி அவர்களிடம் கீழ்கண்ட ஆவணங்களை ஆஜர் செய்யுமாறு காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டார்.

வ. எண்	ஆவணங்கள் விபரம்	தாள்களின் எண்ணிக்கை
1	Thadicombu Town Panchayat Challan Register for Property Tax and other taxes, Dated: 03.07.2026.	3
2	Thadicombu Town Panchayat Birth Registration Late Fee Challan Receipt No. 211/2026-27, Dated: 03.07.2026.	1
3	Petition of Tr.Kanagaraj, S/o Periyasamy, Kamatchipuram, Thadicombu, Dindigul, Dated: 02.07.2026 requesting to provide new water service connection to his house.	2

4	Voucher No. 223, which contains bills in the name of Annai Electricals, Thadicombu.	14
5	Petition of Tr.Raja, D.No.7/1, KappiliyapattiPudur, Thadicombu, DindigulDate: Nil requesting to provide new water service connection to his house.	6
6	House Regularization file of Tmt.Sridevi, D/o Arulmozhi, Ward No.14, Boothipuram, Chennamanaickenpatty Road, Thadicombu.	32

மேற்படி ஆவணங்கள் விசாரணைக்காக மகஜரில் கைப்பற்றப்பட்டது. பின்னர் மேற்படி அலுவலகத்தின் முதல் தளத்தில் இருந்த கலந்தாய்வு அறையினை சோதனை செய்ய சந்தேகத்திற்கிடமான வகையில் பணமோ, பொருளோ கண்டறியப்படவில்லை. பின்னர் செயல் அலுவலருக்கு சொந்தமான TN 57 BA 3757 Swift Dezire என்ற காரானது தாடிக்கொம்பு தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகத்திற்கு கிழக்கே பேரூராட்சிக்கு சொந்தமான இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக செயல் அலுவலர் தெரிவித்தார். அந்த வாகனமானது என் முன்பாக அந்த காரின் ஒட்டுநர் திரு.சூசைமாணிக்கம் அவர்கள் முன்னிலையில் சோதனை செய்யப்பட்டது. அந்த வாகனத்தில் பணமோ பொருளோ கண்டறியப்படவில்லை. பின்னர் காவல் ஆய்வாளர் அவர்கள் செயல் அலுவலர் அவர்களிடம் மேலேகண்டவாறு கைப்பற்றப்பட்ட ஆவணங்களின் நகல்களை கொடுத்து அந்தக்கோப்புகளின் மீது விதிகளுக்கு உட்பட்டு உரிய நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தினார். மேலும் கீழ்கண்ட பணம் மற்றும் ஆவணங்களை விசாரணைக்காக மகஜரில் கைப்பற்றப்பட்டது.

வ. எண்	அலுவலர் மற்றும் தனிநபரின் விபரம்	கைப்பற்றப்பட்ட பணம்
1	திருமதி.K. கலைச்செல்வி, இளநிலை உதவியாளர், தாடிக்கொம்பு தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகம், திண்டுக்கல் மாவட்டம்.	ரூ.25,400/-
2	திரு.R.ஜான், அன்னை ஏஜென்சீஸ் (எலெக்ட்ரிக்கல்ஸ்), கே.பிரகறை, உண்டார்பட்டிஅஞ்சல், தாடிக்கொம்பு, திண்டுக்கல் மாவட்டம்.	ரூ.15,500/-

3	திரு.துளசிராம், ஆதி இன்ஜினியரிங், (கட்டிடகான்டிராக்டர்) க.எண்.83, மாசிலாமணிபுரம், பாலகிருஷ்ணாபுரம், திண்டுக்கல் மாவட்டம்.	ரூ.12,000/-
	மொத்தம்	ரூ.52,900/-

பின்னர் அந்த அலுவலகத்தில் பணிபுரியும் தற்காலிக கணினி ஆப்பரேட்டரான திரு.ஆனந்தபாபு என்பரின் மொபைலை பெற்று அவரது மொபைல் எண். 9047979178 என்ற எண்ணோடு இணைக்கப்பட்டிருந்த தாடிக்கொம்பு கனரா வங்கி கணக்கு எண்.1490101016305 இணைப்பில் உள்ள Google Pay கணக்கை என் முன்பாக ஆய்வு செய்த போது கடந்த 6 மாதத்தில் சந்தேகத்திற்கிடமான வகையில் பணப்பரிமாற்றமானது கீழ்கண்டவாறு நடந்துள்ளது தெரியவந்தது.

வ. எண்	பணபரிமாற்ற விபரம்	பெறப்பட்ட தொகை (ரூ)
1	Santhanammal, dated: 05.02.2026	**10,000**
2	Jeganatha Thiruganam, dated: 10.02.2026	8,818
3	Sundara Srinivasan, dated: 20.02.2026	6,000
4	Kalidas, dated: 24.02.2026	20,500
5	Periyasamy, dated: 25.02.2026	8,000
6	Ramya C, dated: 26.02.2026	4,000
7	Stenen Vignesh, dated: 12.03.2026	64,000
8	Akilan Arumugam, dated: 28.04.2026	6,600
9	Prabhu Vetrivel, dated: 26.05.2026	8,000
10	Kutty K.P.L, dated: 26.05.2026	4,300
11	Maheswaran, dated: 27.05.2026	7,000
12	K.P.Construction, dated: 10.06.2026	10,000
	Total	1,57,218

மேற்படி வங்கி பரிவர்தனைகளை கேபி கன்ஸ்ட்சன்ஸ் Stenen Vignesh மற்றும் காளிதாஸ் ஆகியோர் ஒப்பந்ததார்கள் என்றும் தாடிக்கொம்பு பேரூராட்சி பணிகளை

செய்து வருபவர்கள் என்றும் தெரியவந்தது. மேற்படி பணமானது ஒப்பந்த பணிகளை வழங்கியதற்காக செயல் அலுவலர் திருமதி.பானுஜெயரணி அவர்களுக்கு லஞ்மாக திரு.ஆனந்தபாபு அவர்களின் Google Pay கணக்கிற்கு அனுப்பபட்டுள்ளது என்று நம்புவதற்கு தகுந்த காரணம் இருப்பது தெரியவந்தது. மேலும் சோதனையின் போது நான் செயல் அலுவலர் திருமதி.S.பானுஜெயராணி மற்றும் அலுவலகத்தில் இருந்த பிற பணியாளர்கள் மற்றும் தனிநபர்களை விசாரணை செய்து வாக்குமூலங்களை பதிவு செய்தேன். மேலும் இத்திடீர் தணிக்கையின் போது அலுவலகத்திலிருந்த ஆவணங்களுக்கோ மற்ற பொருட்களுக்கோ சேதம் ஏதும் ஏற்படுத்தப்படவில்லை. மேலும் சோதனையின் போதிருந்த அலுவலர்களுக்கோ, மற்றவர்களுக்கோ உடல் ரீதியாகவோ மற்றும் மன ரீதியாகவோ எவ்வித துன்புறுத்தலும் ஏற்படுத்தவில்லை. இந்த திடீர் இணை ஆய்வு தொடர்பாக செயல்முறை குறிப்புகள் 03.07.2026ம் தேதி 16.00 மணி முதல் 21.45 மணி வரை தயார் செய்யப்பட்டது. எனவே மேற்படி கணக்,கில் வராத லஞ்சப்பணம் ரூ.52,900/-ம் தொடர்பாக 1) திருமதி.S.பானு ஜெயராணி, செயல் அலுவலர், தாடிக்கொம்பு தேர்வு நிலை பேரூராட்சி அலுவலகம், திண்டுக்கல் மாவட்டம், 2) திருமதி.K.கலைச்செல்வி, இளநிலை உதவியாளர், தாடிக்கொம்பு தேர்வு நிலை பேரூராட்சி அலுவலகம், திண்டுக்கல் மாவட்டம், 3) திரு.R.ஜான், த/பெ.ரத்தினம், அன்னை ஏஜென்சீஸ் (எலெக்ட்ரிக்கல்ஸ்), கே.பிரகறை, உண்டார்பட்டிஅஞ்சல், தாடிக்கொம்பு, திண்டுக்கல் மாவட்டம், மற்றும் 4) திரு.G.துளசிராம், த/பெ.S.காந்திநாதன், ஆதி இன்ஜினியரிங், (கட்டிடகான்டிராக்டர்), க.எண்.83, மாசிலாமணிபுரம், பாலகிருஷ்ணாபுரம், திண்டுக்கல் மாவட்டம் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd/-xxxxx (Tr.P.Sivakumar, 04/07/2026)

Sir, Received the complaint on 04.07.2026 at 17.00 Hrs. and registered a case in Dindigul Vigilance and Anti-Corruption Cr.No.08/2026, u/s 7(a) of of Prevention of Corruption Act 1988, as Amended by the Prevention of Corruption (Amendment) Act 2018, on 04.07.2026 at 17.00 hrs. Sd/-xxxxx (P.Palanisamy, Inspector of Police, V&AC, Dindigul 04.07.2026)

Original FIR along with the complaint of Tr.P.Sivakumar, the Inspection Cell Officer, O/o. the Inspection Cell Officer, Madurai and the Joint Surprise check proceedings are submitted to the Hon'ble Principal District Judge, Dindigul and copy of the FIR is submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

04/07/26

(P.Palanisamy)
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Dindigul.